**தலைப்பு 291 – கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமை திணைக்களம்**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமை திணைக்களத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புரைகள் உள்ளடக்கப்பட்ட தொகுப்பு அறிக்கை 2023 மே 30 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் திணைக்களத்திற்கு உரித்தான வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2023 யூன் 12 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வெளியிடப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாரளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து நிதிக்கூற்றுக்களில் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமை திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பவற்றை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்கள் தொடர்பாக எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பகுதியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்கவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்கவும் உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று இன்றி நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய

வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் ஆகியன கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம், திணைக்களத்தினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமான வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுபடுத்த வேண்டியதுடன், அம்முறையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்பு

நிதிக்கூற்றுக்கள், ஒட்டுமொத்தமாக மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் வழங்குதல் மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன், அதன் பொருண்மை தொடர்பில் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு அவற்றை பயன்படுத்துவோரால் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்களின் மீது தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம், கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. மேலும், என்னால்

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்காக அடிப்படையொன்றினை பெற்றுக்கொள்ளும் போது, மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணல் மற்றும் மதிப்பீட்டின˙ போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள˙ திட்டமிடப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டன. பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதற்கு, அவை தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல˙ அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய˙தல் ஆகியவற்றால் ஏற்படுகின்றமை காரணமாக அமைகிறது.

- உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பில் அபிப்பிராயமொன்றினை தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாது, சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதற்காக உள்ளக கட்டுப்பாடு தொடர்பில் புரிந˙துணர்வொன்று பெற்றுக்கொள்ளப்பட்டது.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பீடு செய்தல்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மற்றும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் ஒட்டுமொத்தமாக மதிப்பீடு செய்யப்பட்டன.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டது.

## 1.5 ஏனைய சட்ட தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1) (ஈ) பிரிவின் பிரகாரம் நான் பின்வரும் விடயங்களை தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருந்தன.

(ஆ) முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தொடர்பான பரிந்துரைகள் செயல்படுத்தப்பட்டது.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரை

### 1.6.1 நிதிக் கூற்றுக்கள் சுற்றறிக்கை ஏற்பாடுகளிற்கு இணங்காமை

2022 திசெம்பர் 13 ஆம் திகதிய 2022/05 ஆம் இலக்க அரச நிதி வழிகாட்டலின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் அத் தேவைப்பாடுகளிற்கு மாறாகச் செயற்பட்டிருந்த சந்தர்ப்பங்கள் பின்வருமாறாகும்.

.

.

| | கணக்காய்வு அவதானிப்புகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | காசுப்பாய்ச்சல் கூற்றில் தொழிற்பாட்டு நடவடிக்கைகளில் மானியம் மற்றும் மாற்றங்களின் கீழ் காண்பிக்கப்பட வேண்டிய ரூபா 3,111,073 தொகை தனியாள் ஊதியத்தின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது. | காசுப்பாய்ச்சல் கூற்றில் தொழிற்பாட்டு நடவடிக்கைகளில் மானியம் மற்றும் மாற்றங்களின் கீழ் அரசாங்க வருமானத்திலிருந்து மீளச் செலுத்தும் விதத்திலான செலவினங்களாவதுடன் அரச உத்தியோகத்தர்களின் கடன் வட்டி தனியாள் ஊதியம் மற்றும் தொழிற்பாட்டுச் செலவினத்தின் கீழ் சரியாகக் காண்பிக்கப் பட்டுள்ளது. | இல. 1506 இல் அரசாங்க ஊழியர் களுக்கான ஆதனக் கடன் வட்டி செலவின விடயத்தின் கீழ் வேறாக கணக்கிடப்பட்டிருந்தத ன் காரணமாக காசுப்பாய்ச்சல் கூற்றிலும் இவ்வாறே வெளிக்காட்டப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 2022 திசெம்பர் மாதத்தில் ரூபா 555,000 இற்கு விற்பனை செய்யப்பட்ட மோட்டார் வாகனம் முதலீட்டுச் செயற்பாட்டின் காசு உட்பாய்ச்சலாக காண்பிக்கப்படுவதற்குப் பதிலாக ஏனைய வருமானத் தலைப் பிற்காக சேகரிக்கப்பட்ட வருமானமாக தொழிற் பாட்டு நடவடிக்கைகளின் கீழ் காண்பிக்கப் பட்டிருந்தது. | எதிர்காலத்தில் சரியாக கணக்கு களைத் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாக. | நீண்ட காலச் சொத்தான மோட்டார் வாகன விற்பனையின் மூலம் கிடைக்கப் பெற்ற பணம் காசுப்பாய்ச்சல் கூற்றில் முதலீட்டு நடவடிக்கையின் கீழ் காண்பிக்கப்பட வேண்டும். |

### 1.6.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

**(அ) அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக் கூற்று**

இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்புகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| முற்பண ‘‘பீ’’ கணக்கு மற்றும் ‘‘சீசீ 10 பதிவேட்டிற்கும் இடையே ஒப்பிடுகையில் முப்பத்தி மூன்று பேரின் பதவிகளிலும் ஆறு உத்தியோகத்தர்களின் பெயர்களிலும் வேறுபாடு நிலவியதுடன் பதினாறு உத்தியோகத்தர்களின் பதவிகள் சீசீ 10 பதிவேட்டில் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அவ் உத்தியோகத்தர்களிடம் இருந்து அறவிடப்பட வேண்டிய இடர் கடன் மீதி ரூபா 8,007,750 ஆகக் காணப்பட்டது. | புதவிநிலை உத்தியோகத்தர்கள் சேவை மூப்புநிலை எய்திய அடிப்படையில் பதவிப் பெயர்கள் மாற்றமடைவதுடன் ஏனைய உத்தியோகத்தர்களின் பதவிகளும் பெயர்களும் திருத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். | சீசீ 10 பதிவேட்டில் குறிப்பிடப்பட்டில் உத்தியோகத்தர்களின் பெயர்களும் பதவிகளும் சரியாக உள்ளடக்கப்பட வேண்டும். |

**(ஆ) ஆதன, இயந்திர உபகரணங்கள்**

ஆதன, இயந்திர உபகரணங்கள் கணக்கீடு செய்யப்படுகையின் பின்வரும் குறைபாடுகள் கண்டறியப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்புகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டின் போது நிதி நிலைமைக் கூற்றில் நிதியல்லாத சொத்துக்களின் கீழ் ரூபா 42,007,000 இற்கு மதிப்பீடு செய்யப்பட்டிருந்த மொறட்டுவ, மாத்தறை மற்றும் கொடவாய எனும் 03 காணிகளின் உரிமை 2022 திசெம்பர் 31 வரையிலும் திணைக்களத்திற்கு கிடைக்கப்பெற்றிருக்கவில்லை. | மோறட்டுவ அலுவலகத்தின் காணி சுற்றுலா மற்றும் காணி அமைச்சிற்கு அனுப்பி வைக்கப்பட்டதைத் தொடர்ந்து அவ் அமைச்சால் மொறட்டுவ பிரதேச செயலகத்திற்கு அனுப்பி வைக்கப் பட்டுள்ளதாக அறிவிக்கப் பட்டுள்ளது. மாத்தறை அலுவலகத்தின் காணியைக் கையேற்பதற்கு உரித்தான தற்போதைய நிலையை ஆராய்ந்து தென் மாகாண காணி ஆணையாளருக்கு 2023.03.22 ஆம் திகதி கடிதம் ஒன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.<br>கொடவாய விடுமுறை விடுதிக் காணியை கையளிப்பது தொடர்பாக எதிர்வரும் நடவடிக்கை களை மேற்கொள்ளுமாறு குறிப்பிட்டு பிரதேச செயலகம் ஹம்பாந் தோட்டைக்கு 2023.04.04 ஆம் திகதி ஓர் கடிதம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. | உரிமையைக் கையேற்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ii) | பிரதேச செயலக அலுவலகத்திற்கு உரித்தான ஓர் கட்டிடத்தில் இயங்கி வந்த சிலாப பிரதேச செயலகம் ரூபா 2,800,000 இற்கு மதிப்பீடு செய்யப்பட்டு நிதியல்லாத சொத்துக்களின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது. | தகவல்களை ஆராய்ந்தறிந்து சீராக்கம் செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். | சீராக்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (iii) | 2014 யூன் 20 ஆம் திகதி குச்சவெளிப் பிரதேச செயலாளரால் திணைக்களத்திற்கு உரிமை மாற்றம் செய்யப்பட்டிருந்த திருகோணமலை பிரதேச செயலகம் இயங்கிவரும் காணி ரூபா 12,400,000 இற்கும், கட்டிடம் ரூபா 44,000,000 இற்கும் மதிப்பிடப்பட்டிருந்த போதிலும், அவை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை . | 2023 ஆம் ஆண்டின் போது கணக்கீடு செய்யப்படுவதாக | நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட வேண்டும். |
| (iv) | 1999 ஆம் 2017 ஆம் ஆண்டுகளின் போது திணைக்களத்தின் பெயரில் பதிவு செய்யப்பட்டிருந்த ரூபா 9,800,000 இற்கு மதிப்பீடு செய்யப்பட்டிருந்த இரு மோட்டார் வாகனங்களும் ஐக்கிய நாடுகளின் முகவர் நிறுவனத்தின் மூலம் 2022 ஆம் ஆண்டின் போது திணைக்களத்திற்குக் கையேற்கப்பட்ட இரு மோட்டார் சைக்கிள்கள் உள்ளடங்கலாக திணைக்களத்திடம் 08 மோட்டார் சைக்கிள்களின் பெறுமதி மதிப்பிடப்பட்டு கணக்கீடு செய்யப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பழுதுபார்க்கப்பட்டதை அடுத்து பயன்பாட்டிற்கும் ஓட்டத்திற்கும் பயன்படுத்தப்பட்ட இவ் 02 வாகனங்களின் மதிப்பீட்டு அறிக்கை 2023.02.16 ஆம் திகதி கிடைக்கப்பெற்றிருந்ததுடன் 2023 ஆம் ஆண்டின் போது கணக்கீடு செய்யப்பட்டிருந்ததாக. மோட்டார் சைக்கிள்கள் கணக்கீடு செய்யப்பட்டிராமை குறித்து கருத்துத் தெரிவிக்கப்பட்டிருக்கவில்லை. | மோட்டார் வாகனங்களும் மோட்டார் சைக்கிள்களின் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (v) | பெறுகைக் குழுவின் தீர்மானத்தின் படி, 2022 ஆம் 2023 ஆம் ஆண்டுகளில் ரூபா 2,192,000 இற்கு விற்பனை செய்யப்பட்ட 07 வாகனங்கள் வாகன விற்பனை செய்யப்படும் சந்தர்ப்பம் வரையிலும் நிதியல்லாத சொத்துக்களாக கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | 2019.07.03 ஆம் திகதிய அரச கணக்குகள் சுற்றறிக்கை இல. SA/MA/MA-02/ Assets இன் பிரகாரம் சகல நிலையான சொத்துக்களும் கணக்கீடு செய்யப்படும் சந்தர்ப்பங்களில் அவ் வாகனப் பயன்பாட்டில் இருந்தும் ஓட்டத்தில் இருந்தும் அகற்றப்பட்டு கைதவிர்க்கப்படும் நிலையில் காணப்பட்டமையால் இவை கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கை அறிவுறுத்தல்களுக்கு அமைவாக சகல வாகனங்களும் சொத்துக்களாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

**(இ) கட்டுநிதி மீதி**

கட்டுநிதி மீதி கணக்கீடு செய்யப்படுகையில் பின்வரும் குறைபாடுகள் கண்டறியப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்புகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| திறைசேரியின் கணனி அச்சீட்டின் படி, ''ஏனைய தலைப்பிற்காக அறிக்கையிடப்படும் நிறுவனத்தினால் ஏற்கப்படும் செலவினம்'' ரூபா 10,423,210 ஆன போதிலும் இது ரூபா 9,370,493 ஆக கட்டுநிதி இணக்கக் கூற்றில் காண்பிக்கப்பட்டிருந்தது. | ஏனைய தலைப்பின் கீழ் ஏற்கப்பட்ட மொத்த செலவினம் ரூபா 10,423,210 ஆன போதிலும் குறித்த பணிக்கான தொகையின் மூலம் இதற்காகச் செலவிடப்பட்டிருந்த ரூபா 9,370,493 தொகையானமையால் கட்டுநிதி இணக்கக் கூற்றில் அம் மீதி பெறப்பட்டிருந்தது. | அரச கணக்கீட்டு வழிகாட்டலின் படி, குறுக்கு பதிவுகளினூடாக ஏற்கப்பட்ட செலவினங்களும் உள்ளடக்கப்பட வேண்டும். |

**(ஈ) புத்தகங்களும் பதிவேடுகளும் பேணப்பட்டிராமை**

திணைக்களத்தால் பின்வரும் சில பதிவேடுகள் பேணப்பட்டிராததுடன் சில பதிவேடுகள் முறையாகவும் நாளதுவரையாகவும் பேணப்பட்டிராமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

| | கணக்காய்வு அவதானிப்புகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | நிதிப் பிரமாணம் 1647 (உ) இன் படி, வாகனப் பட்டியலிடப்படும் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. | பதிவேடுகள் தயாரிக்கப்பட்டு வருகின்றன. | நிதிப் பிரமாணத்தின் படி பதிவேடுகளைப் பேணுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ii) | நிதிப் பிரமாணம் 371 இன் படி, முற்பணப் பதிவேடு முறையாகவும் நாளதுவரையாகவும் பேணப்பட்டிருக்கவில்லை. | முற்பணப் பதிவேட்டின் குறைபாடுகள் நிவர்த்தி செய்யப்பட்டு பேணப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் | நிதிப் பிரமாணத்தின் படி பதிவேடுகளைப் பேண வேண்டும். |

**(உ) கணக்கீட்டு உத்தியோகத்தரால் மேற்கொள்ளப்பட வேண்டிய உறுதிப்படுத்தல்**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் படி, கணக்கீட்டு உத்தியோகத்தரால் பின்வரும் விடயங்கள் தொடர்பாக உறுதிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்த போதிலும் இதன் படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

| கணக்காய்வு அவதானிப்புகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் படி, திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாடு தொடர்பாக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாடு முறைமை ஒன்று தயாரிக்கப்பட்டு பேணப்பட்டு வருவதாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த ணேடியதுடன் அம் முறைமையின் வினைத்திறன் தொடர்பாக காலத்திற்குக் காலம் மீளாய்வை மேற்கொண்டு இதன் படி முறைமையை ஆக்கபூர்வமாக நடைமுறைப்படுவத்துவதற்கு அவசியமான மாற்றங்களை மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும் அம் மீளாய்வுகள் எழுத்து மூலமாக மேற்கொள்ளப்பட்டு அதன் பிரதிகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், அத்தகைய மீளாய்வுகள் மேற்கொள்ளப்பட்டமைக்கான கூற்றுக்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வு அவதானிப்பைக் கவனத்திற்கொண்டு அவற்றைத் திருத்திக்கொள்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் படி, நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**(ஊ) சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களின் ஏற்பாடுகளிற்கு இணங்கியிராத சந்தர்ப்பங்கள் பின்வருமாறு விபரிக்கப்பட்டு காண்பிக்கப்பட்டுள்ளது.

| | அவதானிப்புகள் | | | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| | **சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு** | **பெறுமதி ரூபா** | **இணக்கமின்மை** | | |
| (i) | 2011 இன் 49 ஆம் இலக்க கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமை திருத்தச் சட்டத்தின் 31 (4) ஆம் பிரிவு | 2,892,165 | 2015 ஆம் ஆண்டு முதல் 2022 திசெம்பர் 31 ஆம் திகதி வரையான காலப்பகுதியின் போது அனுமதியற்ற நிர்மாணிப்புகளை அகற்றுவதற்காக திணைக்களத்தால் செலவிடப்பட்டிருந்த ரூபா 3,410,551 தொகையில் ரூபா 2,892,165 தொகை குறித்த தரப்பினரிடம் இருந்து அறவிடப்பட்டிராததுடன் அப் பெறுமதி செலவிடப்பட்ட தொகையின் 84.8 சதவீதமாகக் காணப்பட்டது. | குறித்த முகவரிகளில் இல்லாதவர்களிடம் இருந்து பணத்தை அறவிடுவது சிக்கலாக உள்ளதுடன் செலவினத்தை அறவிட்டுக்கொள்வதற்காக சட்டப் பிரிவால் தேவையான நடவடிக்கைகள் திட்டமிடப்பட்டு வருவதாகவும். | அனுமதியற்ற நிர்மாணிப்புகளை அகற்றுவதற்காக ஏற்கப்படும் செலவினத்தைக் குறித்த தரப்பினரிடமிருந்து அறவிடப்படுவதற்காக உகந்த நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ii) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் 880 | - | பிணைக்கட்டளைச் சட்டத்தின் படி, குறித்த உத்தியோகத்தர்களிடம் இருந்து பிணைத் தொகையைப் பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அரச கணக்குகள் திணைக்களத்திற்கு அனுப்புவதற்காக 2023.03.09 ஆம் திகதி நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக. | குறித்த உத்தியோகத்தர்களிடம் இருந்து பிணைத் தொகையைப் பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (iii) | 2016 திசெம்பர் 29 ஆம் திகதிய இல. 30/2016 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் 3.1 ஆம் | சகல எரிபொருள் பரிசோதனையும் 12 மாத கால எல்லையின் பின்னரோ அல்லது 25,000 கி.மீ. பயணித்த பின்னரோ அல்லது இயந்திரத்துடன் தொடர்பான திருத்தவேலைகளின் பின்னரோ எனும் காரணங்களில் முதன்மையான காரணத்தை அடுத்து மீள எரிபொருள் பயன்பாடு தொடர்பாக பரிசோதனை மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும், நிறுவனத்தின் 17 வாகனங்கள் தொடர்பாக இவ்வாறு எரிபொருள் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | 2022 ஆம் ஆண்டின் போது நாட்டில் ஏற்பட்ட எரிபொருள் தட்டுப்பாடு நிலவியமையால் வருடாந்த எரிபொருள் பரிசோதனையை மேற்கொள்ள இயலாதிருந்ததாகவும் இவ் ஆண்டின் போது வாகன எரிபொருள் பரிசோதனையை மேற்கொள்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக. | முறையான விதத்தில் எரிபொருள் பரிசோதனை மேற்கொள்ளப்பட வேண்டும். |

**2. நிதி மீளாய்வு**

**2.1 வருமான முகாமைத்துவம்**

நிலுவையான வருமானத்தைச் சேகரிப்பது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| லங்கா மினரல் சான்ட் லிமிடட் நிறுவனத்திற்கு 2007 ஆம் ஆண்டு முதல் 2020 செப்தெம்பர் வரையான காலப்பகுதியின் போது வழங்கப்பட்டிருந்த 04 அனுமதிப்பத்திரங்களுக்கும் 2020 செப்தெம்பர் 07 ஆம் திகதி முதல் 2021 செப்தெம்பர் 06 ஆம் திகதி வரையான காலப்பகுதியின் போது விநியோகிக்கப்பட்ட அனுமதிப்பத்திரங்களுக்கு உரித்தாக அந் நிறுவனங்களால் | பணத்தைப் பெற்றுக்கொள்வது தொடர்பில் கைத்தொழில் அமைச்சின் செயலாளரின் தலைமைத்துவத்தில் நடாத்தப்பட்ட கலந்துரையாடலின் போது நியமிக்கப்பட்ட குழு 2023.04.04 ஆம் திகதி கூட்டப்பட்டு எடுக்கப்பட்ட தீர்மானத்தின் படி, லங்கா மினரல் சான்ட் நிறுவனத்தினால் அரசாங்கத்திற்கு அறவிடப்பட வேண்டிய கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்கு உடன்பாடு தெரிவிக்கப்பட்டிருந்ததாக. | அரசாங்கத்திற்கு அறவிடப்பட வேண்டிய கொடுப்பனவுகளை விரைவாக அறிவிட்டுக் கொள்ள வேண்டும். |

| | | |
|---|---|---|
| அங்கீகரிக்கப்பட்ட மண் கியூப்களின் அளவைப் பார்க்கிலும் கூடுதலாக மேற்கொள்ளப்பட்ட அகழ்வுகளாலிருந்து அறவிடப்பட வேண்டிய முறையே ரூபா 72,895,000 தொகையான ரூபா 1,688,515 தொகையான கட்டணம் அறவிடப்படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |

## 2.2 செலவின முகாமைத்துவ

வருடாந்த பாதீட்டு மதிப்பீடு தயாரிக்கப்படுவது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| நிதிப் பிரமாணம் 50(ii) இன் பிரகாரம் வருடாந்த செலவின மதிப்பீடு இயலுமான வரையில் முழுமையாகவும் சரியாகவும் தயாரிக்கப்பட்டுள்ளதாக கணக்கீட்டு உத்தியோகத்தர் பொறுப்புக் கூற வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் நி.பி. 66 மற்றும் நி.பி. 69 மாற்றத்தின் மூலம் 07 செலவின விடயங்களின் பாதீட்டு மதிப்பீட்டு ஏற்பாடு 23 சதவீதத்தில் இருந்து 300 சதவிதம் வரையான வீச்சில் மாற்றப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கை இல: 03/2022 இன் படி, 04 செலவின விடயங்களில் இருந்து சேமிக்கப் பட்டிருந்த ஏற்பாடுகள் முன்னைய ஆண்டு முதல் நிலவும் மீன்பிடி அமைச்சிற்கு மேற்கொள்ளப்பட வேண்டிய கொடுப்பனவுகளிற்காகவும் நட்டஈட்டு இழப்புகளைப் பதிவளிப்பதற்காகவும் இல. 1404 செலவின விடயத்திற்கு போதாத அளவு வீட்டு வாடகைத் தொகையைச் செலுத்துவதற்காகவும் நி.பி. 66 இன் மூலம் மாற்றப்பட்டதாக. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் வருடாந்த செலவின மதிப்பீடு இயலுமான வரையில் முழுமையாகவும் சரியாகவும் தயாரிக்கப்பட வேண்டும். |

## 2.3 பொறுப்புகள் மற்றும் கடப்பாடுகளுக்கு உட்படல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு ரூபா 5,704,453 ஆன பொறுப்புகளில் 2019 ஆம் ஆண்டிற்காக மீன்பிடி அமைச்சிற்குச் செலுத்த வேண்டிய ரூபா 2,875,316 தொகையான பாதுகாப்பு சேவைத் தொகையும் ரூபா | மீன்பிடி அமைச்சிற்குச் செலுத்த வேண்டிய நிலுவைத் தொகை எதிர்காலத்தில் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு கொடுத்துத் தீர்ப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படுவதாக. | ஏற்பாட்டு எல்லைகளிற்கு உட்பட்டு பொறுப்புகளை ஏற்படுத்தி தீர்த்துவைப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | 455,237 தொகையான சேவைச் செலவினமும் நிலவியமை அவதானிக்கப்பட்டது. | | |
| (ஆ) | நிதிக்கூற்றுக்களில் குறிப்பு (iii) மற்றும் (iv) குறிப்பில் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலவிய சகல பொறுப்புகளும் வெளிப்படுத்தப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டிற்குரித்தான ரூபா 266,233 தொகையான பொறுப்புகள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை | பட்டியல்களை பொறுப்பாக உள்ளடக்குவதற்கு ஏற்பாடுகள் போதுமானதாக இருக்கவில்லை. | ஏற்பாட்டு எல்லைகளிற்குள் சகல செலவினங்களும் முகாமைத்துவம் செய்யப்பட வேண்டியதுடன் சகல பொறுப்புகளும் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயற்பாடுகளை மேற்கொண்டிராமை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| 2022 ஆம் ஆண்டின் செயற்பாட்டுத் திட்டத்தின் படி, ஆண்டின் போது பூர்த்திசெய்யப்படுவதற்காகக் காணப்பட்ட 04 நிர்மாணிப்புச் செயற்பாடுகளுக்கு உரித்தான பௌதீக முன்னேற்றம் 5 சதவீதம் முதல் 35 சதவீதம் வரையான வீச்சில் நிலவியமையால் அச் செயற்திட்டங்களில் இருந்து எதிர்பார்க்கப்பட்ட நலனைப் பெற்றுக்கொள்ள முடியாதிருந்தது. | மிரிஸ்ஸ, மீட்டர் 120 இலான நடைபாதை வழக்கு நடவடிக்கைகளின் காரணமாக, நீதிமன்றக் கட்டளைப்படி, நிர்மாண வேலைகள் தற்காலிகமாக இடைநிறுத்திவைக்கப்பட்டுள்ளன.<br>அம்பாறை, நிந்தவூர் இல் உள்ள 07 கரையோரக் கட்டமைப்பு நிர்மாணிப்புகளுக்கான கரையோரப் பாதுகாப்பு நிர்மாணிப்புச் செயற்திட்டம் 2023 ஆம் ஆண்டு வரை தொடர்ந்து செயற்படுத்தப்படுவதற்கு திட்டமிடப்பட்டு நிர்மாணிப்பு வேலைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.<br>மோறட்டுவை லுணாவை 500 மீட்டர் நீளமான ரிவட்மன்ட் சுவர் திருத்தப்படுவதற்கான செயற்திட்டத்தில் இயந்திரத்திற்காக டீசல் வழங்கப்பட முடியாது போனமையால் எதிர்பார்க்கப்பட்ட பௌதீக முன்னேற்றத்தை எய்துவதற்கு இயலாது போயிற்று.<br>திருக்கோவிலில் 110 மீட்டர் கேபியன் மற்றும ரிவட்மன்ட் சுவர் தயாரிப்புச் செயற்திட்டம் பூர்த்தி செய்யப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக. | திட்டமிடப்பட்ட இலக்குகள் எய்தப்பட வேண்டியதுடன் அவ்வாறில்லாத விடத்து திட்டங்கள் திருத்தப்பட வேண்டும். |

## 3.2 எதிர்பார்க்கப்பட்ட பூர்த்தி நிலையைப் பெற்றிராமை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2012 முதல் 2022 திசெம்பர் 31 ஆம் திகதி வரையான காலப்பகுதியின் போது உடைத்து அகற்றப்படுவதற்கான கட்டளை வழங்கப்பட்ட அனுமதியற்ற 2,228 நிர்மாணிப்புகளில் 2,069 நிர்மாணிப்புகள் அகற்றப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உடைத்து அகற்றப்படுவதற்கான கட்டளை வழங்கப்பட்ட அனுமதியற்ற நிர்மாணிப்புகளில் கரையோரப் பகுதியிலும் அதிபாதுகாப்பு வலயங்களில் உள்ளவற்றை உடனடியாக அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் இதற்கு அப்பால் உள்ள நிர்மாணிப்புகளிற்காக அனுமதி வழங்குவதற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. | முறையான செயற்பாட்டில் அனுமதியற்ற நிர்மாணிப்புகளை தாமதமின்றி அகற்றுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) 2021 ஆம் 2022 ஆம் ஆண்டுகளின் போது 13 மாவட்டங்களில் நடவடிக்கை எடுப்பதற்கிருந்ததாக இனங்காணப்பட்டிருந்த மொத்த அனுமதியற்ற நிர்மாணிப்புகள் 861 இல் 255 அனுமதியற்ற நிர்மாணிப்புகளிற்காக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கரையோரப்பகுதியிலும் அதிபாதுகாப்பு வலயங்களில் நிர்மாணிக்கப்பட்டுள்ள அனுமதியற்ற நிர்மாணிப்புகளுக்காக முதன்மையாக முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளதாக. | முறையான திட்டமிடப்பட்ட செயற்பாட்டில் அனுமதியற்ற நிர்மாணிப்புகளுக்காக அவசியமான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3.3 பெறுகைகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| நிதி மற்றும் வெகுசனத் தொடர்பாடல் அமைச்சால் விநியோகிக்கப்பட்ட 2018 ஒக்டோபர் 23 ஆம் திகதிய பீஎப்டீ 05/2018 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் அரச நிறுவனங்களால் e-GP முறைமையினூடாக இணையவழிப் பெறுகையினூடாக நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படுவதற்காக அதில் | திணைக்களத்தால் e-GP முறைமையினூடாக வழங்குனர்களைப் பதிவு செய்யும் நடவடிக்கைகள் இது வரையிலும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. | சுற்றறிக்கையின் விதப்புரைகளிற்கு அமைவாக இணையவழிப் பெறுகை நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். |

குறிப்பிடப்பட்ட மாதிரிகளின் படி, நிறுவனத்தால் 2015 ஆம் ஆண்டு முதல் மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுச் செயற்பாடுகள் தொடர்பான விபரம் மற்றும் 2019 ஆம் ஆண்டிற்கான கொள்வனவுத் திட்டம் தயாரிக்கப்பட்டு 2018 நவம்பர் மாதம் அரச நிதித் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் திணைக்களத்தால் இதற்கு உரித்தான எவ்வித செயற்பாடுகளும் இது வரையில் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மின்னியக்க முறைமையில் நிலவிய குறைபாட்டின் காரணமாக 2022 மார்ச் முதல் ஒரு வருடத்திற்கும் மேலான காலமான ஓட்டத்தில் ஈடுபடுத்தப்படாது ஒரே இடத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த ஓர் வாகனம் திருத்தப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிராததன் காரணமாகவும் பெறுமதி ரூபா 11.9 மில்லியனாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்த Volvo Excavator வாகனம் ஒன்றும் பல வருட காலமாக பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்படாத காரணத்தாலும் கைவிடப்பட்டு துரப்பிடிக்கும் நிலைக்குட்படுத்தப் பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | மின்னியக்க முறைமையில் நிலவிய குறைபாட்டின் காரணமாக ஓட்டத்தில் ஈடுபடுத்தப்படாத மோட்டார் வாகனத்தைத் திருத்தி ஓட்டத்தில் ஈடுபடச் செய்வதற்கும் Volvo Excavator வாகனத்தைத் திருத்துவது பொருளாதார ரீதியாக இலாபகரமற்றமையால் கைதவிர்ப்பதற்காகவும் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக. | வாகனங்கள் தொடர்பாக முறையான கவனம் செலுத்தி தேவையான திருத்த வேலைகளை மேற்கொள்ள வேண்டும். |
| (ஆ) | பெறுமதி ரூபா 5,800,000 ஆக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்ட PD-1046 ஆம் இலக்க TOYOTA HILUX டபிள் கப் வண்டி 2021 நவம்பர் 16 ஆம் திகதி கரையோரப் பாதுகாப்பு மற்றும் தாழ் நில அபிவிருத்தி இராஜாங்க அமைச்சிற்கு ஒப்படைக்கப்பட்டிருந்த போதிலும், அதன் உரிமையைக் கைமாற்றுவதற்கோ அல்லது அவ் | மீள வழங்கும் அடிப்படையில் இராஜாங்க அமைச்சிற்கு வழங்கப்பட்டிருந்த இவ் வாகனம், மீளப் பெற்றுத் தருமாறு அறிவிக்கப்பட்ட போது அது மேலும் பயன்பாட்டிற்கு அவசியமெனக் குறிப்பிட்டு அவ் அமைச்சால் 2023.03.03 ஆம் திகதி ஓர் கடிதம் | இராஜாங்க அமைச்சு இரத்தாகி உள்ளமையால் அவ் வாகனத்தை திணைக்களத்திற் குப் பெற்றுக்கொள்வத ற்கான நடவடிக்கை |

| | | |
|---|---|---|
| வாகனத்தை திணைக்களத்திற்குக் கையளிக்கப்படுவதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக. | எடுக்கப்பட வேண்டும். |

## 3.5 இழப்புகளும் நட்டங்களும்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| 2022 யூன் 23 ஆம் திகதி Hyundai Excavator இயந்திரத்திற்கு நேர்ந்திருந்த ரூபா 54,320 தொகையான நட்டம் தொடர்பான ஆய்வு நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டு புத்தகங்களில் இருந்து பதிவழித்துக்கொள்வதற்கோ அல்லது அறவிடப்படுவதற்கோ 2022 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | குறித்த செலவின விடயங்களுக்கு நி.பி. 66 இன் மூலம் ரூபா 750,000 தொகையான ஏற்பாடு மாற்றப்பட்டதை அடுத்தும் இவ் இழப்பைப் புத்தகங்களில் இருந்து பதிவழிப்பதற்கு போதுமான ஏற்பாடுகள் இன்மையால் இது 2023 சனவரி மாதம் புத்தகங்களில் இருந்து பதிவழிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படுவதாக. | பரிசீலனை நடவடிக்கைகள் பூர்த்தியடைந்து புத்தகங்களில் இருந்து பதிவழிப்பதற்கோ அல்லது அறவிட்டுக்கொள்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 4. நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை எய்துதல்.

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| காலநிலையை அண்மித்த கரையோர இடர் தடுப்பு மற்றும் கரையோர சுற்றாடல் முறைமையை நிலையாகப் பதுகாப்பது தொடர்பில் நிலைபேறான அபிவிருத்தி இலக்கின் கீழ் இனங்காணப்பட்ட செயற்கை மண்ணிடல் செயற்திட்டத்தைச் செயற்படுத்தும் செயற்பாடு செயற்படுத்தப்பட்டிராமை. | திணைக்களத்தின் 2021 – 2025 திட்டத்தில் செயற்கை மண்ணிடல் செயற்திட்டம் உள்ளடக்கப்பட்டிருந்த போதிலும் நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடி காரணமாக அவற்றைச் செயற்படுத்துவதனைக் கைவிடத் தீர்மானிக்கப்பட்டதாக. | திட்டமிடப்பட்ட செயற்பாடுகளை மேற்கொண்டு இலக்கை எய்த வேண்டியதுடன் அவ்வாறு செயற்படுத்த இயலாத சந்தர்ப்பங்களின் போது திட்டத்தைதிருத்தி இதன் படி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 5. மனிதவள முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு திணைக்களத்தில் 541 அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினில் சிரேஷ்ட நிலையில் 15 பதவிகளும், மூன்றாம் நிலை மற்றும் இரண்டாம் நிலைகளில் 67 பதவிகளும், ஆரம்ப நிலையில் 66 பதவிகளுமாக 148 பதவிகள் வெற்றிட நிலையில் காணப்பட்டதுடன் 24 அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் பதவிகள் மிகையாகக் காணப்பட்டன. வெற்றிடங்களை நிவர்த்தி செய்வதற்கோ அல்லது தற்போதுள்ள பதவிகளின் எண்ணிக்கையின் அடிப்படையில் கடமைகளை மேற்கொள்ளும் இயலுமை குறித்து மீளாய்வு செய்து தேவைப் படி திருத்தத்தை மேற்கொள்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வெற்றிட நிலையில் உள்ள மேலதிகப் பணிப்பாளர் நாயகம் மற்றும் உதவி பணிப்பாளர் பதவிகளுக்காக ஆட்சேர்ப்பதற்கும், பணிப்பாளர் (கரையோர வளங்கள் முகாமைத்துவம் ) பதவியில் பதில் கடமையாற்றுவதற்காக நியமிக்கப்படுவதற்கும் அங்கீகாரத்தைப் பெறுவதற்காக அனுப்பிவைக்கப்பட்டுள்ளதுடன் பிரதி பணிப்பாளர் (பொறியியல் சேவைகள்) பதவிக்கான நியமனம் செயற்பாட்டில் உள்ளது. நீர் விஞ்ஞான அளவையியலாளர் பதவிக்காக ஏற்ற உத்தியோகத்தர்களை வழங்குவதற்கான நடவடிக்கை எடுப்பதாக அளவையியல் திணைக்களத்தால் அறிவிக்கப்பட்டுள்ளது.<br>சிவில் பொறியியல் மற்றும் நிர்வாக உத்தியோகத்தர் எனும் பதவிகளுக்காகவும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சிற்கு அறிவிக்கப்பட்டுள்ளதுடன் அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் மிகையான பதவிணியினருக்கான அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக. | தேவையான அங்கீகாரத்தைப் பெற்று ஆட்சேர்ப்புகளை மேற்கொள்வதற்கோ அல்லது நிலவும் பதவியணியினை அடிப்படையாகக் கொண்டு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான இயலுமை தொடர்பாக மீளாய்வை மேற்கொண்டு பதவியணி எண்ணிக்கையைத் திருத்திக்கொள்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |